மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA
WELLA HAIR DRESSING
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 92 | 27.06.2023 (செவ்வாய்க்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00

# இலங்கையில் இடம்பெற்ற 2009 இனப்படுகொலைக்கு நீதிவேண்டும்!

## பிரித்தானியாவில் அண்ணாமலை



பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் கு. அண்ணாமலை பிரித்தானியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது கடந்த 23.06.2023 அன்று ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து உலகத் தமிழர் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் கல ந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற 2009 இனப்படுகொலைக்கு சரியான தீர்வை பெற்றுத்தர கோரியும், இலங்கை வாழ் தமிழ் சமூகத்தினர்படும்

பக்கம் 4

## ரணிலுடன் பேசி தீர்வைப் பெறலாம் என்று நம்புகின்றோம்!

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்வரும் ஜூலை மாதம் வரை பொறுமையாக இருக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளதாக தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 4

## காணிகளை விடுவிக்க அமைச்சரவை அங்கீகாரம்..!

### வெளியான விசேட அறிவித்தல்



பக்கம் 4

வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றினால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக வர்த்தமானி ஊடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மக்களின் குடியிருப்புக்களும் விவசாயம், நீர்வேளாண்மை மற்றும் மேய்ச்சல் தரைக்கு பொருத்தமான இடங்களும்

## இலங்கைக்கு சீனாவுடன் இராணுவ உடன்படிக்கையா..? பிரான்ஸில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க!!



பக்கம் 4

சீனாவுடன் இராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வதேச ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், சீனா, இலங்கையில் இராணுவ ரீதியான நகர்வுகளை முன்னெடுக்கும் என தாம் கருதவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் பற்றி பேசப்பட்டாலும் அங்கு வர்த்தக ரீதியான

## இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பேச்சுவார்த்தை வெற்றி!



பக்கம் 4

ஆசியான் நாடுகளுக்கு விசேட கவனம் செலுத்தி பிரதான மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களுடன் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக, இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SLTFTA) தொடர்பான

## யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவு : விசேட பேரவை அமர்வு ஜூலை 12 ஆம் திகதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள நால்வரில், மூவரைத் திறமைப் புள்ளி ஒழுங்கில் தெரிவு செய்வதற்கான விசேட பேரவை அமர்வு எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக்



பக்கம் 4

விளம்பர தொடர்புகளுக்கு
+94 76 567 3339

## ஈழத் தமிழர்கள் மீது அண்ணாமலைக்கு ஏன் திடீர் பாசம் - எம்.கே. சிவாஜிலிங்கம் கேள்வி?



பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் கே. அண்ணாமலையின் புலம்பெயர் தமிழர்களை நோக்கிய பயணம் ஒரு பிரசார பயணமாக இருக்கலாம் என்று தாம் கருதவதாக தமிழ் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பக்கம் 4

# நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு

## ஏ9 வீதி மற்றும் மன்னார் வீதிகளை முடக்கி மக்கள் போராட்டம்



அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு எனத் தெரிவித்து வவுனியாவில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் முன் மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், ஏ9 வீதி மற்றும் மன்னார் வீதிகளும் மக்களால் முடக்கப்பட்டன.

நேற்று காலை முதல் மதியம் வரை சுமார் இரண்டு மணித்தியாலத்திற்கு மேலாக இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், போக்குவரத்து பாதைகளும் முடக்கப்பட்டிருந்தன.

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப் பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் இரு நேரம் மட்டும் உணவை உட்கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர், அரச உத்தியோகத்தர்கள், வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தே இவ் கவனயீர்ப்பு வீதி மறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா பிரதேச செயலக வளாகத்தினுள் காலை 9.30 மணியளவில் கள்ளிக்குளம், தேக்கவத்தை, நெளுக்குளம், தோணிக்கல் ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்கள் தமக்கு நீதி கோரி போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கைகளை வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன் போராட்ட இடத்திற்கு சென்று கேட்டறிந்ததுடன், முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தாம் நியாயமான முறையில் விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் பொது மக்களிடம் தெரிவித்திருந்தார்.

எனினும், வவுனியா பிரதேச செயலாளரின் தீர்வு தமக்கு திருப்தியில்லை என தெரிவித்து காலை 10.30 மணியளவில் பிரதேச செயலகம் முன்பாக வவுனியா - மன்னார் பிரதான வீதியினை முற்றாக வழிமறித்த மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். இதனால் அப்பகுதியூடான போக்குவரத்து 11.00 மணி வரை ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

அத்துடன், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தின் வாயிலின் முன்பாக சிங்கள கிராமத்தினை சேர்ந்த மக்களும், வவுனியா மாவட்ட செயலக வாயிலின் முன்பாக கூமாங்குளம் கிராமத்தினை சேர்ந்த மக்களும் காலை 10.00 மணி தொடக்கம் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட மூன்று தரப்பினரும் காலை 11.30மணியளவில் ஏ9 வீதியில் பண்டாரவன்னியன் சதுக்கம் முன் ஒன்று கூடி வவுனியா - மன்னார் பிரதான வீதி மற்றும் ஏ9 வீதி ஆகிய இரு பிரதான வீதிகளையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் பொலிஸ் உயர் அதிகாரிகள் பல தடவைகள் கலந்துரையாடியும் தொடர்ந்தும் மக்கள் வீதியினை மறித்து போராட்டத்தினை தொடர்ந்திருந்தனர்.

இதனையடுத்து, கொக்குவெளி இராணுவ முகாம் கட்டளைத் தளபதியும் போராட்ட இடத்திற்கு வருகை தந்து வீதியை விட்டு மக்களை விலகுமாறும் அரசாங்க அதிபரிடம் கலந்துரையாடுவதற்கு தாம் ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தனர்.

அதன் பின்னரும் தொடர்ந்தும் பொதுமக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்ததுடன் மதியம் 12.30 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையினுள் போராட்டகாரர்கள் உள்நுழைந்திருந்தனர்.

மாவட்ட செயலகத்தின் அரசாங்க அதிபர் காரியாலயம் முன்பாக ஒன்று கூடியவர்களுடன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர கலந்துரையாடியதுடன், அவர்களின் கோரிக்கையினை கேட்டறிந்து கொண்டார். அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் ஆரம்ப பட்டியல் மாத்திரமே இது. இறுதிப்பட்டியல் இது வரை வெளியாகவில்லை. இது தொடர்பில் முறைப்பாடுகளை இணையம் மூலம் மேற்கொள்ள முடியும். அல்லது கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு எமது உத்தியோகத்தர்கள் வருகை தருவார்கள்.

அவர்களிடம் வழங்குமாறும், கிராமத்திற்கு உத்தியோகத்தர்களின் விஜயம் தொடர்பான திகதியினை வெளியிடுவதாகவும் அரச அதிபர் தெரிவித்தமுடன், அதன் பின்னரே இறுதி பட்டியல் வெளியிடப்படும் எனவும் அரசாங்க அதிபர் உறுதிமொழி வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றிருந்தனர்.

குறித்த போராட்டம் காரணமாக ஏ9 வீதி மற்றும் வவுனியா- மன்னார் ஆகிய இரு பிரதான வீதிகளின் போக்குவரத்துக்கள் 2 மணித்தியாலயம் 30 நிமிடங்களாக முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தமையுடன் மாற்று வீதிகள் ஊடாக போக்குவரத்து முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# விடுதலையான தமிழ் அரசியல் கைதி தேவதாசன் வீட்டிற்கு "குரலற்றவர்களின் குரல்" அமைப்பு விஜயம்!



கடந்த 15 ஆண்டுகள் தமிழ் அரசியல் கைதியாக சிறைப்படுத்தப்பட்டிருந்த கனகசபை தேவதாசன், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி, கரவெட்டியை சேர்ந்த 65 வயதுடைய க.தேவதாசன், இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக கடமையாற்றி வந்திருந்தபோது கடந்த 2008 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பெயரில் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் மீது தொடரப்பட்டிருந்த இரண்டு வழக்குகளிலும் முறையே, ஆயுள் தண்டனை மற்றும் 20 ஆண்டுகால சிறை தண்டனை என கொழும்பு மேல் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பளித்திருந்தது.

தனக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில், தனக்காக தானே மன்றில் முன்னிலையாகி வாதாடியிருந்த தேவதாசன், தனக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை ஆட்சேபித்து மேல் முறையீட்டு நீதிமன்றில் மேல் முறையீடு செய்திருந்தார். இவ்வாறான நிலையில், அவர் தீடிரென தோல் புற்று நோயினால் பீடிக்கப்பட்டு இரண்டு தடவைகள் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

சிறைச்சாலை தடுப்பில் இவருக்கு, பொருத்தமான மருத்துவமோ போஷாக்கான உணவுகளோ கிடைப்பதற்கு வழியிருக்கவில்லை. இவரது துன்பகரமான இந்த நிலையினை குரலற்றவர்களின் குரல் அமைப்பினராகிய நாம், பல தரப்புகளுக்கும் தெரியப்படுத்தி விடுதலைத் தீர்வுக்கு விரைந்து வழி வகுக்குமாறு தொடர்ந்து அழுத்தம் பிரயோகித்து வந்திருந்தோம்.

அதற்கமைய, பல்வேறு தரப்புகளினதும் கூட்டு முயற்சியின் பயனாக 23.06.2023 தேவதாசன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அரசின் இந்த மனித நேய செயலாற்றலை வரவேற்கின்ற அதே நேரம், மீதமிருக்கின்ற 19 தமிழ் அரசியல் கைதிகளின் துரிதமான விடுதலைக்கு அரசும் ஜனாதிபதியும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரி நிற்கிறது.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள தேவதாசனுக்கு மேற்கொள்ளவேண்டிய வைத்திய சேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பு, ஏனைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் நலன்களுக்காகவும் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

# சட்ட விரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த கோரி கிளிநொச்சியில் மக்கள் ஆர்ப்பாட்டம்..!



சட்ட விரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த கோரி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நேற்று முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்நகர் பகுதியில் அமைந்துள்ள காணிகளை அரச அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவெடுத்து தமக்கு விரும்பியவர்களுக்கு வழங்கி வருவதாக குற்றஞ்சாட்டி அப்பகுதியில் வாழும் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டமானது கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஆரம்பித்து கரைச்சி பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட செயலகம் முன்பாக சென்று நிறைவடைந்தது.

மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனின் பார்வைக்காக மகஜர் ஒன்றும் மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனிடம் கையளிக்கப்பட்டது.



## கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை இன்றுடன் மூடப்படும்!



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக் கான காட்டுப்பாதை இன்று (27) செவ்வாய்க் கிழமையுடன் மூடப்படும் .

குறித்த காட்டுப்பாதை கடந்த ( 12) திங்கட் கிழமை காலை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் சம்பிரதாய பூர்வ மாக திறக்கப்பட்டது..

கடந்த 15 தினங்களில் சுமார் 45 ஆயிரம் அடி யார்கள் பயணித்திருக்கலாம் என கூறப்படு கிறது.

கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஜூலை மாதம் 4ம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறை வடையவிருப்பது தெரிந்ததே.

அதேவேளை, உகந்தை மலை முருகனா லய த்தின் வருடாந்த ஆடிவேல் விழா

உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிரு ப்பது தெரிந்ததே.

## பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

### வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சந்திப்பு





இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்களின், புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் உறவுகள், இந்த அறிக்கையின் பிரதி களை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் களிடம் நேரில் சென்று கையளித்து, தமது வேதனைகளை பகிர்ந்து, தமது உறவுகளுக்கு நடந்தது என்ன என்று அறிய உதவும்படி வேண்டினர்.

## நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு

## யாழ்ப்பாணத்திலும் மக்கள் அதிருப்தி!

அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்ட பதிவுக ளில் முறைகேடு எனத் தெரிவித்து யாழ்ப்பாண த்தில் சில பிரதேச செயலகங்கள் கூடிய மக்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாக தெரிவித்த னர்.

குறிப்பாக நேற்று (26) கோப்பாய் பிரதேச செய லகம் முன்பாக கூடிய மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர் ப்பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் இரு நேரம் மட்டும் உணவை உட் கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட் பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர் களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளி நாடுகளில் இருப்போர், அரச உத்தியோகத்தர் கள், வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தே போராட் டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் நலன்புரி திட்டத்தின் கீழ் பண கொடுப்பனவுகளை மாதம் தோறும் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்து தகுதி உடையவர்க ளின் பெயர் பட்டியல் அண்மையில் வெளியிடப் பட்டது.

குறித்த பட்டியல் மாவட்ட செயலகம், பிரதேச செயலர் பிரிவு, கிராம சேவகர் பிரிவுகளில் பார்வையிட முடியும். தவறுகள்/ ஆட்சேபனை கள்/மேன்முறையீடுகள் இருப்பின் ஜூன் 30ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## ஓட்டமாவடியில் நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்!!



அரசாங்கத்தின் நலன்புரி நன்மைகள், உத விக் கொடுப்பனவு பட்டியலில் பெயர்கள் இணைத்துக் கொள்ளப்படாத பொதுமக்கள் நேற்று (26) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடு பட்டனர்.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரி வுக்குட்பட்ட ஓட்டமாவடி, மீராவோடை, பது ரியா நகர், மாஞ்சோலை, காவத்தமுனை பகு தியைச் சேர்ந்த பொதுமக்களே இவ்வாறு கவ னயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"வேண்டும் வேண்டும் நீதி வேண்டும் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும்" ஏழை, எளிய வறிய மக்களுக்கு அஸ்வெசும் திட்டம் வழங்கப்பட வேண்டும் "எடுக்க வேண்டும் எங்கள் கிராமத்தை கவனமெடுக்க வேண் டும்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதை களை ஏந்தியவாறு ஆண்கள், பெண்கள் என பெருந்திரளான மக்கள் போராட்டம் செய்தனர்.

ஓட்டமாவடி மணிக்கூட்டு கோபுர சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பிரதேச செயலகம் வரை சென்று உதவி பிரதேச செயலாளர் எஸ்.எம்.அல் அமீனிடம் மகஜர் ஒன்றும் கைய ளிக்கப்பட்டது.

## தொல்லியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள்

### தலையிடுவதை நிறுத்த வேண்டும் – விதுர விக்கிரமநாயக்க



தொல்பொருளியல் விவகாரத்தில் பௌத்த தேர ர்கள் தலையிடுவதை நிறுத்த வேண்டும். அவ ர்களது செயற்பாடுகளாலேயே வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்களுக்கு காணி அபகரிப்பு குறித்து வீண் அச்சம் ஏற்படுகிறது. இதுகுறித்து பௌத்த தேரர்களிடம் பல சந்தர்ப்பங்களில் நேரடியாக தெரிவித்துள்ள போதிலும், அவர் கள் அதனை ஏற்க முன்வரவில்லை என புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித் தார்.

தொல்பொருளியல் எனக் கூறி வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இது தொடர்பில் வினவிய போதே அமைச்சர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தொல்பொருளியல் என்பது சட்டத்துக்குட்பட்ட விடயமாகும். தொல்பொருள் கட்டளை சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. அதனை அனைவரும் பின்பற்ற வேண்டும். அத்தோடு இந்த விவகாரத்தில் பௌத்த தேரர்களும், அர சியல்வாதிகளும் தலையிடுவதையும் நிறுத்த வேண்டும். சட்டத்துக்கமைய தொல்பொருள் திணைக்களத்துக்கு மாத்திரம் அதன் நடவடிக் கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடம ளிக்க வேண்டும்.

அதனை விடுத்து தொல்பொருள் திணைக் களம் ஆய்வுகளை முன்னெடுக்கும் பகுதி களுக்குச் சென்று அங்கு சில பௌத்த தேரர் களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக வீண் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. எனவே இந்த விடயத்தில் தலை யிடுவதை அவர்கள் நிறுத்த வேண்டும்.

இந்து ஆலயங்களை அழிப்பதற்கோ , தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கோ எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லை. தொல்பொருள் திணைக்களத்தி னால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்க ளில் மாத்திரமே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் இலாப த்தை ஈட்ட முயற்சிக்காமல் மக்களின் உண் மையான பிரச்சினைகளுக்கு தீர்வினை வழ ங்க வட, கிழக்கு அரசியல்வாதிகள் நடவடி க்கை எடுக்க வேண்டும் என்றார்.

## ஊடகவியலாளர் வின்சன் புளோறன்ஸ் ஜோசப்பின்

## இரண்டாம் ஆண்டு நினைவேந்தல்..!



ஊடகவியலாளர் வின்சன் புளோறன்ஸ் ஜோசப் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம்(26) மதியம் இடம்பெற்றது.

இலக்கியவாதி, மொழி பெயர்ப்பாளர், ஊடக வியலாளர் என பன்முக தளத்தில் இயங்கிய வர் ஜோசப் ஐயா என அழைக்கப்படும் வின் சன் புளோறன்ஸ் ஜோசப் ஆவார்.

அவரின் நினைவேந்தல் நிகழ்வில் அவரது பாரியார் ஜோசப் ஐயாவின் உருவ படத்திற்கு மலர் அணிவித்தார்.

ஊடகவியலாளர் க. ஹம்சனன் பொது சுடர் ஏற் றினார், தொடர்ந்து ஊடகவியலாளர்கள் மலர் தூவி அஞ்சலித்தனர்.

## இலங்கையில் இடம்பெற்ற...

இடர்களுக்கான இணக்கப்பாடு, தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விவாகரம், மலையக தமிழர்களின் உரிமை பலப்படுத்தல், இலங்கை இந்தியா வாழ் அகதிகளின் ஆதரவு என பல வேறு விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நிகழ்வில் ஈழத் தமிழர்கள், மலையக தமிழர்கள் மற்றும் தமிழ் நாட்டுத் தமிழர்கள் என நூற்றுக்கணக்கான புலம் பெயர் தமிழர்கள் கலந்துகொண்டிருந் தனர்.

இலங்கை இந்தியா வாழ் புலம்பெயர் தமிழர்களுக்கு இடையிலான வலுவான பிணைப்பை எடுத்துக்காட்டி, நமது பகிரப்பட்ட மொழி மற்றும் கலாச்சாரத்தை எடுத்துக்கட்டும் நிகழ்வாக இது அமையப்பெற்றிருந்ததாக உலகத் தமிழர் சிவில் சமூக அமைப்பு தெரிவித்திருந்தது.

மேலும், இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்தின் கவலைகள் மற்றும் அபிலாஷைகளை நிவர்த்தி செய்ய தமிழ்நாடு பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் க. அண்ணாமலையுடனும் மற்றும் கட்சியின் தலைமையுடனும் தொடர்ச்சியான உரையாடலை உருவாக்க உலகத் தமிழர் சிவில் சமூகம் வேண்டிநிற்கின்றது என உலகத் தமிழர் சிவில் சமூக அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், அண்ணாமலையின் ஆதரவிற்கு தங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன் எதிர் காலத்தில் அவரது தொடர்ச்சியான ஆதரவை உலகத் தமிழர் சிவில் சமூக அமைப்பு எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணிகளை விடுவிக்க அமைச்...

விடுவிக்கப்பட வேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சி இறுதிக் கட்டத்தினை எட்டியுள்ளது.

அதாவது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, 1985 ஆம் ஆண்டிற்கு பின்னர் குறித்த இரண்டு திணைக்களங்களினாலும் அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிப்பதற்காக துறைசார் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைபிற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அதனடிப்படையில், வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, 1985 ஆண்டு வரையில், குறித்த இரண்டு திணைக்களங்களினாலும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த காணிகளை வரையறை செய்யும் செயற்பாடுகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவடைய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய காணிகள் அனைத்தையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு கிழக்கு மற்றும் அண்டிய பிரதேசங்களில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், காடுகளாக மாறிய பிரதேசங்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த இரண்டு திணைக்களங்களினாலும் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த பிரதேசங்கள் விடுவிக்கப்படும் பட்சத்தில் விவசாயம், நீர்வேளாண்மை, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை போன்றவற்றின் மூலம் உற்பத்திகளை மேற்கொண்டு சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலுடன் பேசி தீர்வைப்...

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கூறுகையில், தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக ஜனாதிபதியிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

அது தொடர்பில் ஆராய்ந்து ஜூலை மாதத்தின் பின் உரிய நடவடிக்கை எடுப்பதற்கே ஜனாதிபதி இவ்வாறு கால அவகாசம் விதித்துள்ளார்.

அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருக்கின்றோம். எமது பிரச்சினைக்கான தீர்வைத் தேடி நாம் இந்தியா செல்ல வேண்டிய தேவை இல்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் பேசி தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நாம் நம்புகின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு சீனாவுடன் இரா...

நடவடிக்கைகளை மட்டுமே சீனா மேற்கொள்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் துறைமுகத்தின் பாதுகாப்பு கடமைகளை இலங்கை படையினரே மேற்கொண்டு வருகின்றனர் எனவும், தெற்கு கடற்படை தலைமையகத்தை ஹம்பாந்தோட்டைக்கு மாற்றும் உத்தேசம் உண்டு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோக்கில் இலங்கையை பயன்படுத்த இடமளிக்கப்படாது என அவர் கூறியுள்ளார்.

இலங்கை ஓர் நடுநிலையான நாடு என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு சீனாவுடன் இரா...

ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று (26) காலை கொழும்பில் ஆரம்பமானது.

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் தொடங்கிய அதன் ஆரம்ப அமர்வில் கருத்துத் தெரிவித்த சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் பிரதான பேச்சுவார்த்தையாளர் கே.ஜே. வீரசிங்க, உடன்பாடு காணப்பட்ட காலவரையறையின்படி நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து திருப்தி அடைய முடியும் என்று குறிப்பிட்டார்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஆகஸ்ட் 21 முதல் 23, வரை நடைபெறும் என்றும், 2024 மார்ச்சில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். 2024ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இறுதிப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக மேலும் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SLTFTA) தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

உலகளாவிய பொருளாதாரத்துடன் இணைவதற்கான இலங்கை அரசாங்கத்தின் நோக்கத்தை தாய்லாந்து பிரதிநிதிகளுக்கு விளக்கிய வீரசிங்க, பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) அங்கம் வகிப்பதற்காக, இலங்கையின் பொருளாதார பிரவேசத்தை முதலில் தெற்காசியாவிலும் பின்னர் அதை கிழக்கு நோக்கியும் விரிவுபடுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பை தாய்லாந்து தூதுக்குழுவிடம் விளக்கினார்.

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்திற்கான (RCEP) செயலகமாகவும் செயல்படும் ஆசியான் செயலகத்தின் செயலாளர் நாயகம் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இலங்கை ஏற்கனவே இது குறித்து ஆராய்ந்துள்ளது.

ஆசியான் மற்றும் பிராந்திய விரிவான பொருளாதாரம் பங்காளித்துவம் ஆகிய இரு துறைகளிலும் தாய்லாந்தின் தீவிர பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) இணைவதற்கு இலங்கை தாய்லாந்தின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் வீரசிங்க கூறினார்.

தாய்லாந்தின் வர்த்தக பேச்சுவார்த்தைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவுரமன் சுப்தாவிதும் (Auramon Supathaweethum) ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக பங்குபற்றியதோடு, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹர்ன்பொல் (Poj Harnpol) உள்ளிட்ட தாய்லாந்து பிரதிநிதிகளும், சர்வதேச ஊடகத்துறை தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஷேனுகா செனவிரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜயவர்தன, பிரதி பிரதான பேச்சுவார்த்தையாளர் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எஸ்.டபிள்யூ.சி. ஜயமினி உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## யாழ். பல்கலைக்கழகத் துணை...

கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஒகஸ்ட் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், பல்கலைக் கழகப் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மூவரும், கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தனர்.

எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் வைத்து பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் கண்காணிப்புடன் விண்ணப்பித்திருக்கும் மூவரினதும் கல்வித் தகைமை, அனுபவம், மற்றும் ஆளுமைத் திறன்களை மையப்படுத்தி, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட 7 வகைப் புள்ளித் திட்டத்தின் படி பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் புள்ளிகளையிடுவர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பெறும் மொத்தப் புள்ளிகளின் படி - திறமை அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விபரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்து அவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி பிரகடனம் செய்வார்.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ. கண்ணதாசன் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபயும், சிரேஷ்ட பேராசிரியருமான தி. வேல்நம்பி ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்தும், விலங்கியல் துறைப் பேராசிரியர் பி. வினோபாபா கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

## ஈழத் தமிழர்கள் மீது அண்...

எமது ஊடகத்தின் மெய்ப்பொருள் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஈழத் தமிழர்களை நோக்கிய இந்திய ஆளும் கட்சியின் நகர்வு, அண்ணாமலையின் பிரித்தானிய சுற்றுப்பயணம், அதன் பின்னணி அரசியல் குறித்து பல விமர்சனங்கள் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பின்னணிகள் தொடர்பில் அவர் கூறுகையில், இந்தப் பயணத்தை நாங்கள் பார்ப்போமாக இருந்தால், இந்தியாவிலேயே தமிழகத்துக்கு கூட அமைச்சர் அமித் ஷா வந்து 9 ஆண்டுகால சாதனையை விளக்கிப்பேசி இருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து பல அமைச்சர்களும் தமிழகத்திற்கு வருகை தந்திருக்கிறார்கள். அதே போல இந்தியாவினுடைய பல பகுதிகளில் அவர்களது பிரசாரம் நடக்கிறது.

இதிலே 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலிலே தமிழகத்தினுடைய 39 தொகுதிகளும், புதுச்சேரி தேர்தல் தொகுதி என 40 தேர்தல் தொகுதிகளை குறி வைத்து ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையிலே ஏதாவது செய்ய முடியுமா என்ற எண்ணம் தேசிய கட்சிகளிடையேயும் முக்கிய கட்சிகளிடையேயும் இருந்து வருவது இயற்கை. அதனுடைய ஒரு அம்சமாகத்தான் இதை நாங்கள் பார்க்க முடியும்.

அதை நோக்கி ஒரு பிரசார பயணமாகவே அண்ணாமலையில் பயணம் இருக்கலாம் என சிவாஜிலிங்கம் கூறுகிறார்.








தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME

CREATIVE DESIGNER
every design has a story
Logos | Flyers | Banners | Name Boards | Brochures | Catalogue | Magazines | News Papers | Product Packaging | Social Media Ads | Badges | Menu | Posters | Vouchers
+94 77 3828 594
kkcreativedesigner@gmail.com
kkcreativedesigner

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 / +94 76 567 3339

# யானைகளால் கதிர்காம கந்தன் ஆலய கொத்துப்பந்தல் புதுப்பிக்கும் சடங்கு.





அம்பாறை மாவட்ட உதைப்பந்து நடுவர்கள் அமைப்பின் வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாக தெரிவும் ஞாயிற்றுக்கிழமை (25) கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மண்டபத்தில் அமைப்பின் பதில் தலைவர் எம். ஏ. பர்ஸான் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிராந்திய உதைப்பந்து மேம்பாடு, அம்பாறை மாவட்ட உதைப்பந்து நடுவர்கள் அமைப்பின் எதிர்கால செயற்பாடுகள், நடுவர்கள் கௌரவிப்பு உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதனை தொடர்ந்து நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டனர். அதனடிப்படையில் போசகர்களாக சிரேஸ்ட நடுவர்களான எம்.ஏ. நபார், எம்.ஐ.எம். அமீரலி ஆகியோரும், ஆலோசகர்களாக ஏ. எம்.எம். இப்ராஹிம், ஏ.எம். இப்ராஹிம், ஏ.எல்.ஏ. கனி, யூ. எல்.எம். ஹனீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் தலைவராக எம்.எல்.எம். ஜமால்தீன், தவிசாளராக எம்.எல்.ஏ. தாஹீர், செயலாளராக அலியார் பைஸர், பொருளாளராக, எஸ்.எல். வை. அரபாத், உப தலைவர்களாக எம்.ஏ. பர்ஸான், ஏ.எம். றிஷாத், எஸ்.எம். உபைத்தீன், உப செயலாளராக ஏ.எம். ஜப்றான், உப பொருளாளராக ஜே.ஏ. மஜித், கணக்கு பரிசோதகர்களாக எம். எம். றஜீப், ஐ. அஸ்பாக் ஆகியோர் சபையால் தெரிவு செய்யப்பட்டனர்.

# அம்பாறை மாவட்ட உதைப்பந்து நடுவர்கள் அமைப்பின் வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாக தெரிவும்.



அம்பாறை மாவட்ட உதைப்பந்து நடுவர்கள் அமைப்பின் வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாக தெரிவும் ஞாயிற்றுக்கிழமை (25) கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மண்டபத்தில் அமைப்பின் பதில் தலைவர் எம். ஏ. பர்ஸான் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிராந்திய உதைப்பந்து மேம்பாடு, அம்பாறை மாவட்ட உதைப்பந்து நடுவர்கள் அமைப்பின் எதிர்கால செயற்பாடுகள், நடுவர்கள் கௌரவிப்பு உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதனை தொடர்ந்து நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டனர். அதனடிப்படையில் போசகர்களாக சிரேஸ்ட நடுவர்களான எம்.ஏ. நபார், எம்.ஐ.எம். அமீரலி ஆகியோரும், ஆலோசகர்களாக ஏ. எம்.எம். இப்ராஹிம், ஏ.எம். இப்ராஹிம், ஏ.எல்.ஏ. கனி, யூ. எல்.எம். ஹனீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் தலைவராக எம்.எல்.எம். ஜமால்தீன், தவிசாளராக எம்.எல்.ஏ. தாஹீர், செயலாளராக அலியார் பைஸர், பொருளாளராக, எஸ்.எல். வை. அரபாத், உப தலைவர்களாக எம்.ஏ. பர்ஸான், ஏ.எம். றிஷாத், எஸ்.எம். உபைத்தீன், உப செயலாளராக ஏ.எம். ஜப்றான், உப பொருளாளராக ஜே.ஏ. மஜித், கணக்கு பரிசோதகர்களாக எம். எம். றஜீப், ஐ. அஸ்பாக் ஆகியோர் சபையால் தெரிவு செய்யப்பட்டனர்.

# சம்மாந்துறை அல் ஹம்றாவில் செயற்பாட்டறை திறப்பு விழா.









சம்மாந்துறை அல் ஹம்றா வித்தியாலயத்தில் செயற்பாட்டறை திறப்பு விழாவும், வகுப்பறை அலங்காரப் போட்டியும், பரிசு வழங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் . உமர் மௌலானா கலந்து கொண்டு வகுப்பறை அலங்காரப் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பரிசில் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் 1ம் இடத்தை செயற்பாட்டறையும், 2ம் இடத்தை தரம் 1 வகுப்பறையும், 3ம் இடத்தை தரம் 3 வகுப்பறையும் தட்டிக் கொண்டது.

மேலும் இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிதர்சினி. மகேந்திரகுமார், ஏஎல்ஏ. மஜீட், திருமதி ஏசி. நுஸ்ரத் நிலோபறா, சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம் ரிஎம். ஜனோபர், அதிபர்களான ஏ. முகம்மட் றிஸ்வான், எம்மிஎம். சாபிர், யூஎல் லாபிர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. நஸீர், வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர்
ஏ. யூசுப், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் யுஏஎம்.பைறோஜ், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# மாவடியில் பெருந்திரளான பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தினர்.





காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகத்தின் முதல் நிகழ்வான எண்ணெய்க்காப்பு சாத்தும்கிரியை நிகழ்வுகள் நேற்று (26) திங்கட்கிழமை ஆரம்பமாகியது. காலையில் இருந்தே பெருந்திரளான பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவதற்காக நீண்ட வரிசையில் நின்றனர். கடந்த(24) சனிக்கிழமை விசேட கர்மாரம்ப கிரியைகளுடன் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமானது.


நேற்று(26) திங்கட்கிழமையும், இன்று (27) செவ்வாய்க்கிழமையும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. நாளை புதன் கிழமை(28) காலை 9 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை செயலாளர் சின்னத்தம்பி சிவகுமார் தெரிவித்தார்.

# கதிர்காமத்திலுள்ள ஏழு மலைகளை அறிவீர்களா?

# வியப்பில் ஆழ்த்தும் விபூதி மலை!!!









ஏழுமலையான் கதிர்காம கந்தன் ஆலயம் என்றால் அனைவருக்கும் கதிரைமலை ஞாபகத்துக்கு வரும்.

இந்த கதிரைமலையை ஏழுமலை என்றும் அழைப்பர். உண்மையில் அது மட்டுமல்ல. அங்கு ஏழு மலைகள் உள்ளன. கதிர்காமத்தை சுற்றியுள்ள ஏழு மலைகளும் ஏழு வகையான மஹத்துவம் வாய்ந்தவை. அதில் கதிரமலை மட்டுமே எல்லோரும் செல்ல அனுமதி உண்டு. அது தவிர வள்ளி மலை, தெய்வானை மலை, இடும்பன் மலை, நாக மலை, பச்சைமலை, களுகுமலை மற்றும் விபூதி மலை ஆகிய மலைகளுடன் சேர்ந்து ஏழு மலைகளின் அதிசய சக்தி கதிர்காம மண்ணை காலம் காலமாக இயக்குகிறது. வியப்பில் ஆழ்த்தும் விபூதி மலை!. இந்த ஏழு மலைகளில் விபூதி மலை பற்றி இம் முறை அறியக் கூடியதாக இருந்தது. இது மிகவும் சிறப்பான தன்மை வாய்ந்தது.

கதிர்காமத்தில் இருந்து கித்துளபவ வழியாக சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் இவ் விபூதி மலை அமைந்துள்ளது.

கதிர்காம கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் திருவிழா நெருங்கும் வேளையில் அது இயற்கையாகவே தரையிலிருந்து வெளிப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மே மற்றும் ஜுன் மாதங்களில் சதா திருநீற்றுச் சுரங்கம் வரும்.

ஒவ்வொரு ஆண்டும், கதிர்காம மலையின் அழகிய திருவிழா நெருங்கும்போது, இந்த வெள்ளை மாவு போன்ற பொருட்கள் தரையில் தோன்றும்.

இந்த பகுதி ஹுனுகெட்டா வல என்றும், முன்னொரு காலத்தில் திருநீறுமலை, விபூதி கண்ட மலைஎன்றும் அழைக்கப்பட்டது.

விபூதி மலையில் ஆடி மாதத்தில் திருவிழா காலங்களில் மட்டும் இயற்கையாக உற்பத்தியாகும் விபூதியே இங்கு பிரசாதமாக இன்று வரை வழங்கப்படுகிறது.

குறிப்பிட்ட வம்சத்தினரே இன்று வரை இங்கு திருநீறு எடுக்கின்றனர். கடந்த வாரம் இவ் விபூதிமலைக்கு சித்தர்கள் குரல் அன்பர்கள் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில் சென்று பூஜை செய்து முறையாக விபூதி எடுத்த அற்புதமான நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இது தொடர்பாக காலாகாலமாக விபூதி எடுத்து விற்பனை செய்து வரும் அங்குள்ள ரவீந்திரன் என்ற இளைஞரை பேட்டி கண்ட போது அவர் பின்வருமாறு தெரிவித்தார்..

" நாங்கள் பிறந்த நாளிலிருந்து இந்த தொழிலைத்தான் செய்து வருகின்றோம். இந்த விபூதி மலையானது கதிர்காம கந்தனின் ஆடிவேல் விழா திருவிழா காலத்தில் மாத்திரம் தான் இப்படியாக மணல் போன்று விபூதியாக வரும். ஏனைய நாட்களில் வெள்ளை நிற பாறையாகவே இருக்கும் .உடைக்கவும் முடியாது .எடுக்கவும் முடியாது .இது கந்தன் அருளாகத்தான் இருக்கும் ." என்றார்.







## வெளிவரும்

**தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்**

தேசியம் www.thesiyamnews.com THESIYAM

**NEWSPAPER SIZES, RATE PER EDITION**

**WEEKLY NEWSPAPER**

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com



இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.